# கொழும்புப் பல்கலைக்கழகம்

## சட்ட பீடம்

## சட்டமாணிப் (மீள்) பரீட்சை, ஆண்டு I – 2018

# இலங்கையின் சட்ட முறைமை

(மூன்று மணித்தியாலம் )

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)**

---

1. "கண்டியச் சட்டமானது ஆள்சார் சட்டமொன்றாக தொடர்ந்திருக்கவில்லை என்பதனால் அச்சட்டம் எவருக்கு ஏற்புடையது என்பது தொடர்பில் சிக்கல்கள் எழுகின்றன."

   கண்டியச் சட்டத்தின் பிரயோகத்துடன் தொடர்புடையதான மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச் சட்ட அதிகார ஆதாரங்களினால் ஆதாரப்படுத்துக.

2. சமகால நீதிமன்ற முறைமைக்கு சட்ட மறுசீரமைப்புக்களை பரிந்துரைக்கும் நோக்கத்திற்காக நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட சட்ட மறுசீரமைப்புக் குழுவின் அங்கத்துவரொருவராக உம்மைக் கருதிக் கொள்க.

   சமகால நீதிமன்ற முறைமையிலுள்ள இடைவெளிகள் மற்றும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றுக்கான பொருத்தமான பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றினை எழுதுக. உமது அறிக்கையானது நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய தோற்றுவாய்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. அர்ஜீனா என்பவனும் மாயா என்பவளும் நீண்ட கால உறவொன்றின் பின்னர் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டில் திருமணஞ் செய்தனர். பின்னர், இஸ்லாம் சமயத்திற்கு மதம் மாறுவதற்கு அர்ஜீனா தீர்மானித்ததுடன் அத் தீர்மானத்திற்கு எந்தவொரு எதிர்ப்பினையும் மாயா வெளியிடவில்லை. 2005 ஆம் ஆண்டில் தேவையான சடங்குகளினை பின்பற்றி முஸ்லிம் மத விசுவாசத்தினை அங்கீகரித்ததுடன் இருவரும் மதம் மாறினர். அவர்கள் தங்களது பெயர்களினை சிபான் மற்றும் சுஹானா என மாற்றிக் கொண்டனர்.

மதம் மாறியதன் உடனடுத்து முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் இரண்டாவது திருமணஞ் செய்வதற்கு தான் விரும்புவதாக சிபான் சுஹானாவிற்குத் தெரிவித்தான். அவனுடைய தனிப்பட்ட செயலாளரான பாத்திமா என்பவளினை திருமணஞ் செய்ய சிபான் விரும்புவதனை சுஹானா கண்டு கொண்டாள். சிபானும் பாத்திமாவும் திருமணத்திற்கு வெளியிலான உறவினை பல வருடங்களாகக் கொண்டிருப்பதாகச் சந்தேகங்கொள்கின்ற சுஹானா மதமாற்றம் மற்றும் உத்தேசித்துள்ள இரண்டாவது திருமணம் என்பவவற்றைக் கேள்விக்குட்படுத்த விரும்புகின்றாள்.

சியானுக்கெதிராக வெற்றிகரமான சட்ட வழக்கொன்றினை தாக்கல் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் சுஹானாவிற்கு ஆலோசனை கூறுக. சுஹானாவிற்கு சார்பாகவும் அவளுக்கு எதிராகவும் எழக்கூடிய அத்தகைய சட்ட வாதப் பிரதிவாதங்களை பொருத்தமான சட்ட ஆதாரங்களினால் மேற்கோள்காட்டி விளக்குமாறு நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

4. 'அமேசன் குடிநீர்' என்ற கம்பனியானது போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்திக்கான நீரினைப் பெறுவதற்காக களுத்துறையில் காணியொன்றைக் கொள்வனவு செய்தது. இதன் பின்னர் நாட்டின் இறப்பரினாலான மெத்தைகளினை உற்பத்தி செய்யும் பெரும் நிறுவனங்களிலொன்றான சின்கோ இறப்பர் உற்பத்திகள் (பிரைவேட்) லிமிட்டெட் என்பது 'அமேசன் குடிநீர்' இற்குச் சொந்தமான நிலத்திலிருந்து கிட்டத்தட்ட 3 கிலோமீட்டர்

தூரத்தில் அமைந்துள்ள இடத்தில் புதிய உற்பத்தி நிலையத்தினை நிருமாணித்தது.

ஆறு மாதங்களின் பின்னர், நீரானது மனிதப்பாவனைக்கு உகந்த தரத்தில் உள்ளதா என்பதனை பரிசோதிப்பதற்காக அமேசன் கம்பனியானது பருவகால பரிசோதனையை மேற்கொண்ட போது இறப்பர் உற்பத்தியின் போது பொதுவாக பயன்படுத்தப்படுகின்ற இரசாயனங்களினால் நீர் மாசுபட்டிருந்தமையானது விஞ்ஞான ரீதியாக நிரூபணமாகியது. அமேசன் குடிநீர் கம்பனியானது நட்டயீட்டினைக் கோரி Ryland's v. Fletcher விதியினடிப்படையிலான வழக்கின் ஊடாக 'சின்கோ இறப்பர் உற்பத்திகள் (பிரைவேட்) லிமிட்டெட்' இற்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது.

சின்கோ இறப்பர் உற்பத்திகள் (பிரைவேட்) லிமிட்டெட்டினுடைய சட்ட அலுவலராக உம்மைக் கருதிக்கொள்வதுடன் Rylands v. Fletcher விதியில் வழக்காளி தங்கியிருக்க முடியுமா என்பது தொடர்பில் சுருக்கக் குறிப்பொன்றினை வரைக.

உமது குறிப்பினைத் தயாரிக்கும் போது, இலங்கையின் சட்ட முறைமையினுள் ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகளின் வருகை தொடர்பில் உள்ளீர்த்தல் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டுமென நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர். உமது குறிப்பில் பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

5. "சட்டமானது மனித இனத்தைப் போன்ற தூய உதிரத்திலிருந்தான படைப்பொன்று அல்ல. பாரம்பரியக் கருத்தில், உரோம டச்சுச் சட்டமானது பிரயோகிக்கப்பட வேண்டிய ஆட்கள், ஆதனம் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான இலங்கையின் சட்டப்பரப்புக்களில் ஆங்கிலச் சட்டானது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது."

Tambiah J. at Kamalawathie v. De Silva at (1961) 64 NLR 252 at p. 259

தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச்சட்ட அதிகார ஆதாரங்களிலிருந்து பெறப்பட்ட பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை சுட்டிக் காட்டுவதன் மூலம் இலங்கையின் சட்ட முறைமையில் ஆங்கிலச் சட்டம் மற்றும் உரோம டச்சுச் சட்டம் என்பன ஒருங்கேயிருப்பது தொடர்பிலான நீதிமன்ற அணுகுமுறையின் வலிதுடைமையினை ஆராய்க.

6. தமிழ் இந்துவான கமலேஷ் என்பவன் பல தலைமுறைகளாக அவனுடைய குடும்பம் வசித்து வந்த பிரதேசமான மன்னாரில் பிறந்தான். பாடசாலையினை நிறைவு செய்யும் வரை அவன் பெற்றோருடன் வசித்ததுடன் பின்னர் உயர்கற்கைக்காக கொழும்பிற்குச் சென்றான். அவன் கற்கையினைப் பூர்த்தி செய்தவுடன் ஐஸ்கிறீம் தயாரிப்பு வியாாபாரமொன்றை நிருமாணிப்பதற்காக அவனது நண்பனான சில்வா என்பவனுடன் இணைந்து நீர்கொழும்பில் நிலமொன்றை கமலேஷ் கொள்வனவு செய்தான். 2001 ஆம் ஆண்டில் திருகோணமலையினைச் சேர்ந்த தமிழ் இந்துப் பெண்ணொருத்தியான சுசீலா என்பவளை கமலேஷ் திருமணஞ் செய்தான். திருமணத்தினைத் தொடர்ந்து அவர்களிருவரும் மன்னாரில் வீடொன்றினைக் கொள்வனவு செய்து, தமது திருமண இல்லத்தினை அங்கு அமைத்துக் கொண்டனர். பின்னர், 2008 ஆம் ஆண்டில் அவர்களிருவரும் கனடாவிற்குப் புலம்பெயர்ந்தனர். அக்காலத்திலிருந்து கோவில் திருவிழாக்களுக்கென நான்கு தடவைகள் மாத்திரமே அவர்களிருவரும் மன்னாருக்கு வருகை தந்துள்ளனர். தற்போது, தமது திருமண இல்லம் மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பு வியாபாரம் என்பவற்றினை சில்வாவிற்கு விற்பனை செய்வதற்கு அவர்களிருவரும் தீர்மானிக்கின்றனர். அவர்களிருவரின் திருமண இல்லத்திற்கு அருகிலுள்ள வசந்தன் என்ற அயலவன் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றான்.

(அ) சுசீலாவும் அவனும் தேசவழமையினால் ஆளப்படுகின்றார்களா என்பது தொடர்பில் கமலேஷிற்கு ஆலோசனை கூறுக. (20 புள்ளிகள்)

(ஆ) உத்தேசிக்கப்பட்டுள்ள விற்பனையினை ஆட்சேபிப்பதற்கு ஏதேனும் சட்ட அடிப்படைகள் வசந்தனுக்கு உள்ளனவா என்பது தொடர்பில் ஆலோசனை கூறுக. (5 புள்ளிகள்)

7. இலங்கையில் சட்டப் பன்மைத்துவம் காரணமாக எழுகின்ற பிரச்சினைகளை ஆராய்க. உமது வாதங்களினை ஆதாரப்படுத்துவதற்கு தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச்சட்ட அதிகாரங்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட எடுத்துக்காட்டுக்களினை பயன்படுத்த வேண்டும் என நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

******